**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**PW – 2** **Date:20.11.2024**

**OS.No. 77/2011**

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20–ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.V.காளிதாசன், B.Com., L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி **(முழு கூடுதல் பொறுப்பு)** அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. மோகனசுந்தரம் | தொழில் | : |
| த/பெ. | திரு. முத்துசாமி | வயது | : |
| முகவரி | : | | |

நான் இந்த வழக்கின் 3ம் தரப்பினர் ஆவேன். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன்.

1) எனது ஆதார் அடையாள அட்டை நகல் **சா.சா.ஆ.1** (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டுள்ளது)

**<u>குறுக்கு விசாரணை (6 முதல் 10 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பு)</u>**

1) வாதி எனது அத்தை ஆவார். எனது தகப்பனார் பெயர் முத்துசாமி. எனது தாத்தா பெயர் மாறன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். எனது அப்பா அவருக்காவும், நான் இளவராக இருந்த எனக்காகவும் சேர்ந்து தாவா சொத்தை பொறுத்து விட்டல்ராஜன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி விட்டல்ராஜன் நாங்கள் கிரையம் சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய அத்தை வாதி பேச்சியம்மாளும் மேற்படி கிரைய பத்திரத்தில் ஒரு தரப்பினர் என்றால் சரிதான்.

நான் மேற்படி கிரைய பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்ததில்லை. தவசிவலையனின் பூர்வக சொத்தை தான் வாரிசுரிமை அடிப்படையில் அடைந்து நாங்களும், எனது அத்தையும் சேர்ந்து விட்டல் ராஜனுக்கு கிரையம் செய்தோமா என்றால் ஆம். கிரையம் செய்வதற்கு முன்பு எனது தகப்பனார் எனது பெரியப்பா சுப்பிரமணி மற்றும் தவசிவலையனின் ஏனைய வாரிசுகள் சேர்ந்து ஒரு பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) நான் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பாக எனது அப்பாவிடம் எதுவும் பேசினேனா என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து என் தாத்தா மாரவலையன் மூலம் வரும் சொத்தினை எனது தகப்பனார் முத்துசாமி, நான், எனது அத்தை வாதி மற்றும் பெரியப்பா சுப்பிரமணியம் ஆகியோர் ஏற்கனவே கிரையம் செய்து கொடுத்தவிட்ட நிலையில் தவசிவலையனின் மற்ற வாரிசுகளுக்கு உள்ள பங்கினை அபகரிக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தற்போது அவிநாசிவலையனின் வாரிசுகளுக்கு மட்டும் தான் பூமி உள்ளது என்றும், தவசிவலையனின் மற்ற வாரிசுகள் தங்கள் பங்கினை விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். நான் எனது அத்தைக்கு சார்பாக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது. மறு விசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2024.11.20 10:38:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி (முகூபொ),
அவிநாசி.